# விவிலியம் : ஜெயங்கொண்டு ஆனந்தித்தல்

***முனைவர் ஞா. அலெக்ஸ் அருள் தாசன்***
உதவிப் பேராசிரியர், தூய யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை, திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6392

***முன்னுரை***

*ஆதியிலே வார்த்தையாலே மனிதனைப் படைத்தார் தேவன். மனிதர்கள் தேவ வார்த்தையை மீறிய போதும் தம் சாயலில் படைத்த மனிதன் மீது அளவில்லாத அன்பு கொண்டு ஆதாம் ஏவாள் மனிதர்களின் பாவ வினையைப் போக்கும் நோக்குடன் இறைவனும் மனிதனாக இப்புவுலகில் வந்து தம்மையே பலியாக்கினார். இயேசு மனிதனாக வாழ்ந்து மரித்து உயிர்த்தெழுந்து ஜெயங்கொண்டது போல் மக்களை ஜெயங்கொண்டவர்களாக மாற்றி வான்வீட்டுக்கு அழைத்து செல்லும் மீட்பராக செயல்படுகிறார் என்பதை அறிய முடியும். அந்த வான்வீடான சிங்காசன மகிமையின் ஆனந்தம் குறித்தும் அந்த ஆனந்தத்தைப் பெற்றுக் கொள்ளும் தேவ வழி குறித்தும் ஆய்வதே இக்கட்டுரையின் சீரிய நோக்கமாயுள்ளது.*

## ஜெயங்கொள்ளுதல்

ஒரு விசுவாசி கிறிஸ்துவில் தன் நிலையைக் காத்துக்கொள்வதையே ஜெயங்கொள்ளுதல் எனலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, “இதோ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்” *(வெளிப்படுத்துதல், 3:11-12)* என்கிறார். இயேசு கிறிஸ்துவுடன் நாம் ஒன்றாய் இருப்பதால் கிடைக்கும் அதிகாரம் பலம் இவற்றுக்கு இணையானது வேறு எதுவும் இல்லை. இந்நிலையில் நாம் இருக்கும் எந்த சத்துருக்களும் நம்மை வெற்றிக் கொள்ள முடியாது என்பதைஇ “என் சத்துரு என்மேல் ஜெயங்கொள்ளாததினால் நீர் என்மேல் பிரியமாயிருக்கிறீரென்று அறிவேன்” *(சங்கீதம், 41:11)* என்ற வசனம் மெய்ப்பித்துக் காட்டுகிறது. மட்டுமல்லாமல் “நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்தது போல ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்” *(வெளிப்படுத்துதல், 3:21)* என்ற வசனப்படி நாம் வான் வீட்டுக்குச் செல்ல வேண்டுமானால் ஜெயங்கொண்டவர்களாக மாற வேண்டும் என்பதை அறிய முடியும்.

**ஜெயங்கொள்ளுதலும் சிங்காசனமும்**

**"யுதகுல ராஜனாக உதித்திட அவன்**
**அவர் திரு மகிமை**
**ஜெயம் கொடுத்திட கடவுளின் அருளாம்"**
***(இயேசு பிறப்புக் கதைப்பாடல், ப.204)***

என்ற கூற்றின்படி தேவ மைந்தன் இயேசு பிறப்பின் நோக்கமே ஆதி தாய் தந்தையின் பழைய வினையைப் போக்கி மனிதனுக்கு ஜெயம் கொடுப்பதற்காகவே என்கதை அறியலாம். இதைதான் "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்தது போல ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்" (வெளிப்படுத்துதல், *3:21*) என்ற தேவ வார்த்தை எடுத்துக்காட்டுகிறது. அதாவது இயேசு ஜெயங்கொண்டது போல நாமும் ஜெயங்கொண்டால் மாத்திரமே அவருடன் சிங்காசனத்தில் ஆனந்த மகிமையைப் பெற முடியும் என்று கூறப்படுகிறது. ஜெயங்கொள்ளுகிறவனுக்கே எல்லா விதமான நன்மைகளும் கிடைக்கும் என்பதை "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான் நான் அவன் தேவனாயிருப்பேன் அவன் என் குமாரனாயிருப்பேன்" (வெளிப்படுத்துதல், *21: 1*) என்ற வேத வசனம் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. தேவன் கொடுக்கின்ற அனைத்தையும் ஒருவன் சுதந்தரித்துக் கொண்டால் நிரந்தர ஆனந்தமாக இருப்பான் என்பதில் எவ்விதமான சந்தேகமுமில்லை. ஏனென்றால் தேவனும் அவனுடன் இருக்கிறார். ஆனால் உலக சிற்றின்பங்களில் விழுந்து போகிறவர்களின் ஆனந்தம் அழிந்து போகக் கூடியதாக உள்ளது. இப்படிப்பட்டவர்களின் முடிவு மரணமாகவே உள்ளது என்பதையே, "புறங்கூறுகிறவர்களுமாய் அவதூறு பண்ணுகிறவர்களுமாய் தேவபகைஞருமாய் துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய் வீம்புக்காரருமாய் பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய் பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவருமாய் உணர்வில்லாதவர்களுமாய் உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய் சுபாவ அன்பில்லாதவர்களுமாய் இணங்காதவர்களுமாய் இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்மானிப்பை அவர்கள் அறிந்திருந்தும் அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல் அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்" (ரோமர், *1:30-32*) என்ற வேத வசனங்கள் நிச்சயமாய் கூறுகிறது. அவர்கள் தேவ வார்த்தைக்கு மீறிய சிற்றின்பங்களை ஜெயங்கொள்ளாததால் தேவனுடன் சிங்காசனத்திலும் வீற்றிருக்க முடியாது. அவர்களின் முடிவு பாதாளமாகவே இருக்கும். மட்டுமல்லாமல் "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கப் கொடுப்பேன் என்றெழுது" (வெளிப்படுத்துதல், *2:7*) என்றார். ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்பவர்கள் ஆனந்திக்காமல் இருக்கமாட்டார்கள். ஏனென்றால் தேவ பிள்ளைகள் அனைவருமே ஜீவ விருட்சக் கனியின் மகிமையினை அறிந்தவர்களே. பாவம் செய்த ஆதாம் ஏவாள் எடுக்கக்கூடாமல் கர்த்தர் காவல் வைத்துக் காத்து கொண்டிருக்கும் ஜீவவிருட்சத்தின் கனியே அதுவாகும். அக்கனி ஜெயங்கொள்ளுகிறவனுக்கே பரிசாகக் கிடைக்கிறது. அத்தகைய ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்த நாளிலே நமக்கு நிரந்தர சுகம் கிடைக்கும் என்பதைஇ

**"இளந்தென்றலில் வரும் நறுமணம்**
**பசுஞ்சோலைகள் இனிய தேன்மலர்**
**உயிர் நாதமாம் நதியின் கீதம்**
**நிரந்தரசுகம் புதுநிலை தரும்"**
***(மாசிலா ஏசுஇ ப.62)***

என்ற பாடல் வரிகளில் மிகத் தெளிவாக எடுத்தியம்புவார் சண்முகம்.

நன்மை செய்தும் பிசாசினால் தீமை அனுபவிப்பதும் அதிகாரங்களால் உபத்திரப்படுவதும் சாத்தனுடைய கூட்டத்தார் செய்கின்ற தேவதூசுணத்தையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். ஆனாலும் கொஞ்சமும் பயப்படாமல் உபத்திரவங்களில் உண் மையாயிரு என்றும் உரைக்கிறார். இதில் யோபு என்ற தேவ மனிதர் நினைவுக் கூறத்தக்கவராக உள்ளார். அப்படி உபத் திரவங்களில் உண்மையாயிருக்கும் போது தேவன் ஜீவ கிரீடத்தை நமக்குத் தருவார். ஆனால் சிலர் தேவ வார்த்தைக்குக் கீழ்படியாமல் சாத்தானுடைய வழிகளை பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை கர்த்தர், "நீ மனந்திரும்பு இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்" (வெளிப்படுத்துதல், 2:16) என்கிறார். இவை மட்டுமல்லாமல் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அவருடைய நாமத்தையே கொடுப்பார். என்பதை, "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும் அந்தக் கல்லின் மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக் கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது" (வெளிப்படுத்துதல், 2:17) என்ற தேவ வாக்கு நமக்கு காட்டுகிறது. இவ்வாறு அவருடைய நாமம் தரிக்கப்பட்ட ஜனங்களுக்கு ஆனந்தமான ஆசிர்வாதங்களையும் கொடுப்பார் என்பதை, "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி என் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்திற்கு சேமத்தைக் கொடுப்பேன்" (2 நாளாகமம், 7:14) என்ற வசனம் நமக்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது.

**சிங்காசனத்தின் ஆதாரமும் ஜெயங்கொள்ளுதலும்**

ஜெயங்கொள்ளுகிறவனே சிங்காசனத்தின் ஆனந்தத்தைப் பெற முடியும். ஆனால் அதற்கு அடிப்படை ஆதாரமாக இருப்பதை சங்கீதக்காரன், "நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்" (சங்கீதம், 97:2) என்கிற வசனத்தில் மிகத் தெளிவாக பாடியுள்ளார். ஜெயங்கொடுக்கக் கூடிய நீதி நியாயம் குறித்த செய்திகளை சாலமோனின் நீதிமொழிகள் முதலாம் அதிகாரம் முழுவதிலும் காட்டப்பட்டுள்ளதை அறியலாம். கர்த்தருடைய சிங்காசனத்தில் தங்குகிறவர்கள் இப்படித்தான் நடக்க வேண்டும் என்பதை, "கர்த்தாவே யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? உத்தமனாய் நடந்து நீதியை நடப்பித்து மனதாரச் சத்தியத்தை பேசுகிறவன்தானே" (சங்கீதம், 15:1-2) என்ற வசனம் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

இயேசு கிறிஸ்து எப்பொழுதும் ஜெயங்கொள்ளுகிற சிந்தையுள்ளவராகவே இருந்தார். அவர் ஒருபோதும் தோல்வியடைந்தவர் அல்லவே கிறிஸ்து உலகம் மாமிசம் பிசாசை அவர் ஜெயித்தார். மரணத்திற்கு அதிபதியான பிசாசையும் பாதாளத்தையும் ஜெயித்தார். தேவ பிள்ளைகளாகிய நாமும் சிங்காசனத்தின் ஆதாரமாகிய நீதி நியாயமாகிய ஜெயசிந்தையை எப்பொழுதும் தரித்துக் கொண்டால் ஜெயங்கொண்டவர் நமக்கும் ஜெயத்தைத் தர வல்லமையுள்ளவராக இருக்கிறார். நம்மில் அன்பாயிருக்கிற தேவனில் நாமும் அன்பில் தரித்திருந்தால் ஜெயங்கொள்ளுவோம் என்பதை, "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே'' (ரோமர், 8:37) என்ற வசன அடிப்படையில் அப்போஸ்தலராகிய பவுல் வெளிப்படுத்திக் காட்டுவார். கர்த்தருடைய கிரியைகளில் பெருகுகிறவர்களாயிருப்போமானால்

ஜெயம் பெறுவோம் ஆனந்தமடைவோம். ஜெயங்கொடுக்கிறவர் தேவன் என்பதையே, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" *(1கொரிந்தியர், 15:57)* என்ற வசனமும் காட்டுகிறது.

## நித்திய ஆனந்தத்திற்கு ஆயத்தப்படு

ஆனந்தம் என்பதற்கு மகிழ்ச்சி களிப்பு பேரின்பம் என்பதாக தமிழ் இலக்கிய அகராதிகள் பொருள் கூறுகின்றன. உலகப் பிரகாரமாக ஆனந்தமாக நாம் பல ஆனந்தங்களை அனுபவிக்கலாம். ஆனால் அதில் எவ்விதமான ஆனந்தமும் நிரந்தரம் இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. நிரந்தரமான நித்திய ஆனந்தமாக சங்கீதக்காரன் பாடுவதை, "உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" *(சங்கீதம், 16: 11)* என்ற சங்கீதப் பாடல் வழி அறியலாம்.

அப்படியென்றால் தேவனின் சமூகம் வலதுபாரிசம் எங்குள்ளது என்று பார்த்தால் அதுவே தேவனின் சிங்காசனம் தேவனின் சிங்காசனத்தில் தேவனோடு வீற்றிருப்பது மட்டுமே நிரந்தர நித்திய ஆனந்தமாக உள்ளது எனலாம். மணவாளனை சந்திக்கும் மணவாட்டியாகிய திருச்சபைக்கும் பரிசுத்தவான்களுக்கும் நித்திய ஆனந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் நுழைவுச்சீட்டாக ஜெயங்கொள்ளுதல் என்ற இரட்சிப்பு உள்ளது என்பது குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதாவது, "ஆகையால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்" *(2தீமோத்தேயு, 2:10)* என்ற வசனத்திலும் மட்டுமல்லாமல் "அவரோடே கூட பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம். நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார் *(2தீமோத்தேயு, 2:12)* என்ற வார்த்தையில் நாம் இயேசுவைப் போல் ஜெயங்கொண்டு சிங்காசனத்தில் வீற்றிருக்க வேண்டுமானால் அவரேர்டு கூட பாடுகளையும் சகிக்க வேண்டும் என்பதாகவும் அப்போஸ்தலராகிய பவுல் கூறுகிறார். டாக்டர் மரியசெல்வத்தின்இ

**"மறைகாரும் உண்மைகள் மண்ணுலகில் உயிர்பெறவே**
**இறைமகனாம் இயேசு இன்னுயிரை ஈந்திட்டார்**
**குறைஏதும் வந்திடுமோ கும்பிடும்நல் மனங்களுக்கு?**
**நிறைவேறும் எல்லாமே நினைத்தப்படி நீயறிவாயே!"**

**(வேரும் விழுதும்இ ப.54)**

என்ற பாடலின்படி மனித குல மீட்பிற்காக வந்தவரே இயேசு கிறிஸ்து அவரின் நோக்கம் நாம் அவருடன் சிங்காசனத்தில் வீற்றிருப்பதே தேவனின் நோக்கத்திற்கேற்ப நாமும் அவருடைய சத்தமாகிய விவிலிய வசனத்திற்கு செவிகொடுத்தால் நித்திய ஆனந்தத்தைப் பெற்று கொள்ளலாம்.

## முடிவாக

**"ஆனந்தத் துதி ஒலி கேட்கும்**
**ஆடல்பாடல் சத்தமும் தொனிக்கும்"**

என்ற பாடல் வரிகளுக்கேற்ப ஆனந்தத் துதி ஒலி கேட்டுக் கொண்டிருக்கும் நிரந்திர நித்திய ஆனந்தமாகிய தேவனின் சிங்காசனத்தில் வீற்றிருக்க வேண்டுமானால் இயேசுவைப் போல உலகையும் பிசாசையும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக காணப்படவேண்டும். உலகப் பாடுகள் அநேகம் வரலாம். அவற்றை சகித்து ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜுவ மார்க்கத்தில் நடந்தால் மட்டுமே ஜுவ கிரீடத்தை சூடி ஆனந்தக் களிப்புடன் தேவனோடு அவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்க முடியும் என்பதையே இக்கட்டுரைக் காட்டுவதாக அமைகிறது.